சாரணர்

(Approved by the Department of Education, Madras State in
R. O. C. No. 687 - N/52 of 4—9—52)

துன்முகி
பங்குனி
62
மார்ச்
1957

ஆசிரியர் குழு :
ஸ்ரீ P. S. ராமசுப்ரமணியம் B. A., B. L.
,, V. பத்மநாபன் B. A., B. L.
,, N. கூத்தப்பன், வித்வான்
,, S. தீர்த்தம்
,, J. D. ஆசீர்வாதம், நிர்வாக ஆசிரியர்

அன்பர்பணி செய்ய எனையாளாக்கி விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே! — தாயுமானவர்

பக்கம்

ரேடியோ சொற்பொழிவு	66
பத்து முத்துக்கள்	70
வருந்துகிறோம்!	73
இரு வைரங்கள்	74
நாணய மாற்றுப் பட்டியல்	77
செய்திகள்	81

✻ ஆண்டுக் கட்டணம் உள்நாடு ரூ. 1. வெளிநாடு ரூ. 2 ✻

பிரதி அணா 2

அலுவலகம்

41, வடக்காவணி மூலவீதி, மதுரை.

ரேடியோ சொற்பொழிவு

[கடந்த பெப்ருவரித் திங்கள் 25-ம் நாள் சென்னை அகில இந்திய ரோடியோவில் திரு. V. S. ரத்னசபாபதி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை, ரேடியோ நிலையத்தாரின் அனுமதியுடன் இங்கு வெளியிடுகிறோம்.

— ஆ-ர்.]

சென்ற ஒரு வார காலமாக சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்த பேடன் பவல் பிரபுவின் பிறந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நமது தேசத்தில் மட்டுமல்ல, உலகம் முழுதும் எங்கெந்த தேசங்களில் சாரணீயம் நடந்து வருகிறதோ அங்கெல்லாம் மிகச் சிறப்பாக இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. உலகத்தில் ஏறக்குறைய 70 தேசங்களில் சாரண இயக்கம் விமரிசையாகவும் உற்சாகத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. அந்த இரக்கங்களில் சுமார் ஒரு கோடிப் பையன்களும் பெண்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து தக்க பயிற்சி பெற்று அதனால் அடையவேண்டிய நன்மையைப் பெற்று வருகிறார்கள். நமது தேசத்திலும் 7 லட்சம் பையன்களும் பெண்களும் இப்பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். இந்தச் சங்கத்திற்கு "பாரத சாரண சங்கம்" என்று பெயரிட்டுள்ளார்கள். கவனித்துப் பார்க்கும்பொ[illegible] தில் சிறுவர்களுக்கா[illegible] அநேக சி[illegible] சிறு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் அகில தேச சாரணர் சங்கம் தான் எல்லாச் சங்கங்களையும் விடப் பெரியதாக விளங்குகிறது. எல்லோ[illegible]ரும் இச்சங்கத்தைப் போற்றுகிறார்கள். இதன் உன்னதமான வேலையைப் பாராட்டுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கவனிக்கவேண்டும். அது, அச்சங்கத்தின் மூலம் சிறுவர் சிறுமியர்க்கு கிடைக்கும் சிறந்த நன்மையேயாகும்.

1857-ம் வருடம் பிப்பிரவரி மாதம் 22-ஆம் தேதி இங்கிலாந்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பேடன் பவல் பிறந்தார். அவருக்கு மூன்று வயது ஆவதற்கு முன்பே அவருடைய தகப்பனார் (Rev. Baden Powel) இறந்துபோனார். ஆகையால் தன் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு தாயாருக்கு ஏற்பட்டது. அந்தப் பொறுப்பை அந்த அம்மை அவர்கள் மகிழ்ச்சியுடனும் திறமையுடனும் ஏற்றுக்கொண்டு குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்த்து வாழ்க்கையைக் கஷ்டத்துடனும் அமைதியுடனும் நடத்தினார்கள். இந்த அம்மையாருடைய நல்லொழுக்கம், பொறுமை, பரந்த நோக்கம், சமயோசித புத்தி, அன்பு, பரோபகார சிந்தை, பரிசுத்தம் இக்குணங்களெல்லாம் தங்களையறியாமலே, இயல்பாகவே, அக்குழந்தைகளிடம் காணப்பட்டன.

இதைப்பற்றி பேடன் பவல் பிற்காலத்தில் மிகவும் பாராட்டித் தம்முடைய உன்னத வாழ்வும், சாமர்த்தியமும், உயர்ந்த பதவியும், தன்னுடைய

225269

தாயாரின் முயற்சியால்தான் என்று அவர் எழுதிய பல புத்தகங்களில் விவரிக்கிறார். மேலும் தம் அன்பு மிக்க தாய்தான் தமது கண்கண்ட தெய்வமென்று புகழ்கிறார். உலகத்தின் பெரியவர்களெல்லாம், காந்தியடிகள் உள்பட, தங்களது மேலான வாழ்வுக்குக் காரணம் தம்மைப் பெற்ற அருமைத் தாயே என்று குறிப்பிடுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அது உண்மைதான். "எப்பொழுது கேவலமான எண்ணமும், தீயவுணர்வும் ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் உன்னுடைய தாயாரை நீ நினைத்துக்கொள்வாயானால் உன்னை நீ உடனே உயர்த்திக் கொண்டு ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியு"மென்று பேடன் பவல் சிறுவர்க்கு வலியுறுத்துகிறார்.

பேடன் பவலுக்குச் சிறுவயதிலிருந்தே தன்னைத்தான் நன்றாக கவனித்துக்கொள்ளும் திறமையும், பிறர்க்கு உதவியாக இருக்கவேண்டும் என்னும் தயாள குணமும் நிறைந்திருந்தன. பிறகு தகுந்த வயதில் ராணுவத்தில் ஒரு போர் வீரனாகச் சேர்ந்தார். அந்த உத்தியோகத்தில் அதிக ஆர்வத்தோடும் வீரத்தோடும் வேலை செய்து வந்தார். அதன் பயனாகப் படிப்படியாக மேல் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டார். போயர் சண்டையிலும், தென்னாப்பிரிக்காவில் Zulu ஜாதியரை எதிர்த்துப் போர் செய்த போதும் அவர் திறமையை நன்குணர்ந்து அவரைத் தளபதியாக்கினர். இந்த வேலையில் இந்தியாவிலும் சில வருடங்கள் வேலை செய்தார். இராணுவத்திலிருந்து நீங்கியபிறகு 1908-ம் வருடம் சாரண சங்கம் ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். "ஒவ்வொருவரும் அவரவர் தேசத்தில் உத்தமமான பிரஜையாக விளங்கவேண்டும். அப்பொழுதுதான் மனிதர் நல்வாழ்வு அடைவார்கள். அவர்களது தேசமும் விருத்தியடைய முடியும்," என்பது அவரது சிறந்த நோக்கமாக இருந்தது.

இந்த நோக்கத்தையடைய ஒவ்வொருவரும் சிறு வயதிலிருந்தே நல்லொழுக்கம், நேர்மை முதலிய முக்கியமான குணங்களைப் பெற வேண்டும். அதற்குத் தகுந்த முயற்சியும் பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மகிழ்ச்சியும், உடல் வலிமையும், உள்ளப் பாங்கும், அன்பும், நிறைந்த பிரஜையாக விளங்க முடியும் என்பதை தாம் வகுத்த சாரணீயத்தில் குறிப்பிட்டுள்ளார். நல்வாழ்வுக்குத் தகுந்த பெரிய தத்துவங்களையும் உண்மைகளையும் குழந்தைகளுக்குப் பெரிய புத்தகங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமும் புகட்டுவது முடியாது. ஆனால் குழந்தைகளுக்கு அவை விளையாட்டின் மூலமாகவே எளிதில் முடியும். அதுதான் சிறந்த, இயல்பான முறை என்று கூறியுள்ளார். அதன் முடிவாக ஏற்பட்டது தான் சாரண இயக்கமும், அதன் திட்டங்களும்.

சாரணீயத்தை மூன்று பிரிவாக வகுத்தார்:

(1) 6 வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர்க்குறிய விளையாட்டு வகுத்தார். அவர்கள் குருளையர் அல்லது குட்டிகள் என்று வழங்கப்பட்டனர். (2) 12 வயது முதல் 18 வயது வரை உள்ள

விளையாட்டுக்குரியோர் சாரணர் என்றும், (3) அதற்குமேல் திரிசாரணர்கள் என்றும் முறைப்படுத்தினர்.

குழந்தைகளுக்கு விளையாட்டில் விருப்பமும் அருமுயற்சியும், சாகஸ குணமும், சந்தோஷமும், நிறைந்திருப்பதை நன்குணர்ந்து அதற்குத் தகுந்த முறையில் குருளையர் பயிற்சி முறைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக குழந்தைகள் பெரும் சத்தமிட்டு விளையாடுவதில் ஆர்வமுள்ளவர்கள். அந்தப் பொருளற்ற, முறையற்ற பெருங் கூச்சலை மாற்றி ஒழுங்காகப் பொருளுள்ள சத்தமாகப் பயன்படும் முறையைச் செய்தார். சத்தம் போடுவதன் மூலம் நல்ல குணங்களைப் புகட்ட முடிகிறது.

உதாரணமாக: "என் செய்வீர்?" என்று கேட்டால், "ஒத்தாசை" என்று அவர்கள் பதில் சொல்லுவது. மறுபடியும் "என் செய்வீர்" என்றபொழுது, "கிராம சேவை" என அவர்கள் பதில் சத்தம் செய்து, மறுபடியும் "என் செய்வீர்" என்று கேட்கும்பொழுது "தேச சேவை" என்று அவர்கள் பதில் சொல்லுவார்கள். இப்படிச் சத்தம் போடும் பொழுது அவர்கள் தங்களையறியாமலேயே பிறர்க்குதவி செய்யும் கடமையை உணருகிறார்கள்.

இதுமாத்திரமல்ல. அவர்களுக்குத் தகுந்த வாக்குறுதி உண்டு. அவர்கள் கடவுளுக்கும் தேசத்திற்கும் தங்கள் கடமையைச் செய்வோம் என்று வாக்குறுதி கொடுப்பதும் அதைப் பின்பற்றுவதும் ஆகும். 10 சட்டங்கள் சாரணர்க்குண்டு. அவை நம்பிக்கைக்குப் பாத்திரமுடைமை, விசுவாசம், பிறர்க்குதவி, சகோதரத்துவம், மரியாதையாயிருத்தல், அன்பாயிருத்தல், பணிந்து நடத்தல், சந்தோஷமாயிருத்தல், சிக்கனம், பரிசுத்தம் என்பன. தவிர சாரணன் தினத்துக்கு 1 உதவியாவது பிறர்க்குச் செய்யக் கடமைப்பட்டவன். இப்படி உதவிசெய்யும் முயற்சியில் உடனுதவி, நீந்தப்பழகுதல், உடல் வலிமை, அதற்குரிய பயிற்சி முதலியன சேர்க்கப்படும். அதற்குத் தகுந்த சாமர்த்தியம் பெற்றிருந்தால் தான் தகுந்தபடி ஒருவன் உதவி செய்ய முடியும். இவைகளுக்கு அறிகுறியாக அநேக சின்னங்களைத் தங்கள் சீரான உடையில் அணிந்து கொள்ளுவார்கள். தவிர, தங்கள் பாதுகாப்பு, தேசப் பாதுகாப்புகளுக்குரிய பயிற்சியும் பெறுவார்கள். இவை யாவும் விளையாட்டின் மூலமும் தலைவர்கள் வழிகாட்டிகளாக நடந்துகொள்ளும் நடத்தையாலும் பெறுவார்கள்.

பாடி வாழ்க்கை :— (Camp life & Camp fire) முக்கியமாக சாரணர் பயிற்சியில் ஊரைவிட்டு வெளியே போய், வெட்ட வெளியிலும், காடுகளிலும் வனாந்திரங்களிலும் முகாம் அல்லது பாடி வாழ்க்கை நடத்தி, தங்களுக்கு வேண்டிய சமையல் முதலிய எல்லாக் காரியங்களையும் தாங்களே செய்து, கூடாரங்களமைத்துச் சில நாட்கள் உற்சாகமாகத் தங்கித் திரும்பிவரும் ஏற்பாட்டில் நல்ல பயிற்சி அடைகிறார்கள். பகல் முழுதும் வேலைகள் செய்து பயிற்சிபெறுவதும், இரவு தூங்குவதற்கு முன், தீ மூட்டி அதைச் சுற்றிலும் வேடிக்கையாக ஆடல் பாடல்களுடன் காலங்கழித்து வருவதும் அவர்கள்

வழக்கமாகும். இதனால் தேக ஆரோக்கியம் அடைகிறார்கள். இயற்கையின் விநோதங்களை அறிகிறார்கள். தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் திறமையும் தைரியமும் பெறுகின்றனர். ஒன்றுசேர்ந்து ஒரே குடும்பத்துச் சகோதரர்போல் வித்தியாசமின்றி வாழப் பழகுவது போன்ற முக்கிய குணங்களைப்பெறுகின்றனர். ஆகையால்தான், சாரணீயம் சிறந்த வாழ்வுக்குத் தகுந்த நல்வழி என்று சொல்லப்படுகிறது. (A way of life).

சாரணீயத்துக்கு அடிப்படையான தத்துவம் ஒன்றுண்டு. அது பேடன் பவல் நோக்கத்தின்படி உலகம் முழுவதும் சமாதானம் நிலவவேண்டுமென்பதும், எல்லா ஜனங்களும் சந்தோஷமாக வாழ வேண்டுமென்பதுமே.

இதை அனுசரித்தே அகில தேச சாரண சங்கம் வேலை செய்கிறது. அதன் சார்பாக அகில தேச மகாநாடு கூட்டப்படும். எல்லா தேசத்துச் சாரணர்களும் ஒரு முகாமில் ஒன்றாகக் கூடுவர். பரந்த இப்பேருலகில் வாழும் மக்களனைவரும் ஒரு உலக மக்கள் என்ற சிறந்த சகோதரத்துவத்தை நன்கு உணருவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு. இம்மாதிரி மகாநாடு, ஜம்போரி சுமார் 50,000 சாரணர், குறைந்தது 60 அல்லது 70 தேசங்களிலிருந்து கூடுவர். வித்தியாசமில்லாது கலந்து பழகுவார்கள். இதன் முடிவாக அவர்கள் பிற்காலத்தில் ஒருவித ஏற்றத் தாழ்வோ, ஜாதி மத பேதமோயின்றி ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்பதன் உண்மையை உணர்ந்து அதன்படி ஒழுகுவார்கள். இந்த உட்கருத்தை உணர்ந்து தான் டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையார் அவர்கள் 1916-ம் வருடம் இந்திய சாரணர் சங்கம் ஒன்றை இந்தியாவில் இந்திய வாலிபர்களுக்கு ஸ்தாபித்தார்கள். பின்னர் 1917-ல் சேவா சமிதி சாரணர் சங்கம் என்று பண்டித மாளவியாவினால் ஆரம்பிக்கப்பட்டு, ஒன்றுபட்டு உழைக்க ஆரம்பித்தது. இச்சாரண சங்கங்கள் பல ஒன்று சேர்ந்து ஹிந்துஸ்தான் சாரணர் சங்கமாகவும், பிறகு பாரத சாரணர் சங்கமெனவும் மாறி இணைந்து, இன்று நமது சுதந்திர இந்தியாவிலே பையன்களுக்கும் பெண்களுக்கும் ஒரே சங்கமாக வேலை செய்து வருகிறது. சுருக்கமாக: சாரணீயத்தின் முக்கிய தத்துவம் "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும்" என்பது தான் இந்த ஒரு சங்கத்தை உலகத்துக்குத் தந்த பேடன் பவலை நாம் பாராட்டிப் போற்றுவது நமது கடமையல்லவா! வாழ்க அவர் நாமம்! வாழ்க சாரணீயம்!!

பத்து முத்துக்கள்

[எஸ். பி. கோமதி]

காலைக் கதிரவனின் இளங் கிரணங்கள் ஜன்னல் வழியாக என் முகத்திலுறைக்கவே நான் விழித்துக் கொண்டேன். படுக்கையிலிருந்து எழுந்து ஜன்னல் பக்கம் திருப்பினேன். உண்மையிலேயே சூசைப் பெரியாரின் தோட்டத்து வண்ண மலர்கள் உள்ளத்தை ஈர்த்தன. மனிதனின் மாசினைக் கண்டு கனீரென சிரிப்பதுபோல் வெள்ளை ரோஜாக்கள் மெல்லிய காற்றில் அசைந்தாடின.

யாரோ வாசற் கதவைத் தட்டும் ஒலி கேட்டு நான் விருட்டென்று எழுந்தேன். அதற்குள் வேலைக்காரி சென்று கதவைத் திறந்து விட்டாள். பளீரென்று துலங்கும் உடையுடன் காலைக் கடன்களை பறை சாற்றியபடி சூசைப் பெரியார் உள்ளே நுழைந்தார். நான் இன்னமும் பல்கூட விளக்கவில்லை. வெட்கமடைந்தவனாய் வேகமாகப் பின்புறம் சென்று பல் துலக்கி முகம் கழுவி விட்டு அவர் எதிரில் வந்து, அமரும்படி கூறினேன்.

அவர் முகம் கவலை நிறைந்து காணபபட்டது. உற்சாகமற்ற நிலையில், என் உபசரிப்பிற்கு வந்தனமளிப்பவர்போல் இளநகை செய்தார். நான் “ஏது, இன்று இவ்வளவு அதிகாலையிலேயே உலாவக் கிளம்பி விட்டீர்கள்?” என்று வினவினேன்.

“என் மனம் அமைதியிழந்து தவிக்கும்பொழுது, நான் இவ்வாறு கிளம்பிவிடுவது வழக்கம். இயற்கையின் தண்மையில் நான் சற்று அமைதி காண்கிறேன்” என்றார், துன்புற்ற குரலில். அவரது கனத்த இமைகளினிடையே வேதனையின் தேக்கம்! வெம்மை நிறைந்த பெருமூச்சால் வேதனையைக் கரைக்க முயன்றார்.

நான் திடுக்குற்றவனாக “தாங்கள் இவ்வாறு அமைதியிழக்கும்படி ஊரில் ஏதாவது நடந்ததா?” என்றேன். அவர் துன்பத்தை வேறு திசையில் திருப்ப முயன்றேன்.

“ஆம், ஊருக்குச் சென்றிருந்தேனல்லவா? அப்பொழுதுதான் இந்தக் கால் விலங்கையும் மாட்டிக்கொண்டு விட்டேன். பிரச்னையை விடுவித்துக் கொள்ள ஆலோசனை கேட்கவே இங்கு வந்தேன்....”. அவரது பேச்சு எனக்கு புரியாத புதிராக இருந்தது.

இதற்குள் வாசற்புறத்தில் என் வேலைக்காரி உரக்கக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தாள். விஷயம் என்னவென்றறிய நான் பெரியவருடன்

வெளியே வந்தேன். பெரியவருடைய தோட்டத்தில் ஒரு சிறுவன் பூக்களையும், செடிகளையும் துவம்ஸம் செய்துகொண்டிருந்தான். வேலைக்காரி அவனைத் திட்டிக்கொண்டிருந்தாள். ஆஹா! சில நிமிடங்களுக்கு முன்பு மலர் வனமாகக் காட்சி அளித்த தோட்டத்து செடிகள் மலர்களுதிர்ந்து மக்களை இழந்த அன்னைபோன்று துவண்டு ஆடின.

பையனைச் சுட்டிக்காட்டி "நான் விலங்கென்று குறிப்பிட்டது இவனையே. என் அமைதியை இழக்கக் காரணமானவன். பார்த்தீர்களா அவன் செயலை?" என்றார் மிக்க வெறுப்புடன்.

அவர் தொடர்ந்து கூறினார், "இவன் எனது சகோதரியின் மகன். சமீபத்தில் தந்தை இறந்துவிட்டதால் அனாதையாக விடக்கூடாது என்ற இரக்கத்தினால் இங்கு கூட்டிவந்தேன். ஆனால், அவனோ கடமையுணர்ச்சி சிறிதும் இல்லாதவனாக இருக்கிறான். புத்தியில்லாத காரியங்களைச் செய்வதும், வினைதரும் விளையாட்டுகளே இவனது பொழுதுபோக்கு. இவனை எவ்வாறு திருத்துவது? ராஜ், இதில் அவசியம் நீங்கள் வழிகாட்ட வேண்டும்." அவருடைய சுபாவமான நிதானம் மறைந்து பதட்டமே அதிகம் காணப்பட்டது.

"நாளடைவில் திருந்தி விடுவான். விளையாடுவது சிறுவர்கள் இயல்பு. இதற்கு நீங்கள் இவ்வளவு கவலைப்படலாமா?" என்றேன், சிரிப்பை வரவழைத்துக்கொண்டு.

"இல்லை ராஜ், நான் முயன்று பார்த்து விட்டேன். திருந்திவரத்தக்க அம்சமே காணப்படவில்லை..."

"ஏன் இல்லை..." நண்பர் அருள்சாமியின் எதிர்பாராத வரவு என்னைத் திடுக்கிட வைத்தது.

"வாருங்கள், நாங்கள் பேசிக்கொண்டிருந்தது உங்கள் காதில் விழுந்ததா?" என்றேன்.

"பெரியவரின் கூற்று விசித்திரமானது. உம்மை எதிரில் வைத்துக்கொண்டே ஒரு சிறுவனைத் திருத்த முடியாது என்பது நகைப்பிற்கிடமானது..." அருள்சாமி ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

"அப்படியானால் இதற்கு நீர் என்ன வழி கூறுகிறீர்?" என்றார் பெரியவர்.

"நண்பர் ராஜ் சிறுவர் உலகத்திலேயே வாழ்பவர். அந்த உலகத்தில் அவனைச் சேர்த்து விட வேண்டியது தானே" என்றார் அருள்சாமி நிதானமாக.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பத்து முத்துக்களென நான் கூறியதை பழித்துக் கூறியவர், இன்று ஓர் சொத்தை முத்தை அதனுடன் இணைக்கப் பார்க்கிறாரே? எங்கள் கொள்கையை ஏளனம் செய்கிறாரா? இல்லை. எனக்கு ஓர் சோதனை நடத்துகிறாரா?" நான் சிந்தனையுடன் அவர் பக்கம் திரும்பினேன்.

“ராஜ், உம்முடைய மனதில் ஓடும் எண்ணங்களை நான் அறிவேன். கண்ணாடிக் கல்லுக்கு வைரப் பட்டை தீட்டினால், அது ஒளியை அள்ளி வீசுமல்லவா? அது உமது திறமையிலுள்ளது........” என்றார் உறுதியுடன்.

சிறுவன். வெயிலுக்காகத் தொங்க விடப்பட்டிருந்த சாயம் பூசிய தட்டியினின்றும் ஒவ்வொரு குச்சியாக உருவிக் கொண்டிருந்தான். ஓய்வின்றி இயங்கும் உள்ளம்! அதற்கு அனுசரணை கூட்டும் உறுப்புக்கள்! இது அவனது குற்றமா? இல்லை. இயற்கையின் விநோதம். நான் கைகளைத் தட்டி அவனை அழைத்தேன். சிறுவன் வேகமாக ஓடி வந்தான். அறை முழுதும் சுழன்ற விழிகள் அவனது துறுதுறுப்பை வெளிப்படுத்தின.

“இது யாருடைய படம்?” என்றேன், கிறிஸ்துவின் படத்தைச் சுட்டிக் காட்டி.

“ஆண்டவரின் படம்”

“அவரை நீ வணங்குகிறாயா?”

“ஓ, கட்டாயம்......” தலையைப் பலமாக ஆட்டினான்.

“அவர் உன்னை அல்லும் பகலும் காப்பாற்றுகிறார். நீ என்ன செய்வாய்?” என்றேன்.

சிறுவன் சட்டென்று படத்தின் முன்பு முழந்தாளிட்டான். “நான் என் கடமைகளைச் செய்வேன்” என்றான் உருக்கமாக. நான் அவனுடன் அவனை அணைத்துக் கொண்டேன்.

“உன் கடமை என்ன என்று தெரியுமா?” என்று கேட்டேன். சிறுவன் புரியாது விழித்தான்.

“உன் கடமை பிறருக்கு உதவி செய்தல். இனி நீ ஓர் சாரணச் சிறுவன். உனது கடமை உபயோகமானதாகவும் பிறருக்கு உதவி செய்தலுமே ஆகும்.” என் கண்களில் ஏன் கண்ணீர் துளிர்த்தது என நான் அறியேன். ஆனால் உணர்ந்தேன்.

“இந்த மூன்றாவது முத்து நீங்கள் சுத்தப் படுத்துவதற்கு முன்பே இவ்வளவு ஒளி வீசுகிறதே ராஜ்?” என்றார் நண்பர் சிரித்தபடி.

“லூகாஸ், வேலைக்காரி நேற்று கிணறடியில் வழுக்கி விழுந்து விட்டாள். நொண்டியபடி செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறாள். நீ ஓடிச் சென்று அவளுக்கு உதவி செய்......” என்று நான் பணிக்கவும் அவன் விரைந்தான்.

சூசைப் பெரியார் பொங்கி வந்த கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

“குழந்தைகளின் விளையாட்டு மனப்பான்மையைப் பயன் படுத்தி பொழுது போக்கு வழியையே ஓர் கல்வித் திட்டமாக்கி, ஓர் கும்பலை உலக சமூகமாக்கியது சாரணர் இயக்கம் என்று, ஆசிரியர் எல். பி. ஜாக்ஸின் கூற்றினைச் செயல் திட்டமாக்குவது தங்கள் கையில் தானே இருக்கிறது ராஜ்?” என்றபடி எழுந்தார் அருள்சாமி.

வருந்துகிறோம் !

சென்னை முன்னாள் முதல் அமைச்சரும் முன்னாள் ஒரிஸ்ஸா கவர்னருமான திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா இம்மாதம் 16-ம் தேதி சென்னை சர்க்கார் ஆஸ்பத்திரியில் காலமானார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

திரு. ராஜா 1898-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராஜபாளையத்தில் பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சஞ்சீவ ராஜா. இவர் இளமையில் ராஜபாளையத்திலும் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் கல்வி கற்றார். இவர் இளம் மாணவராக இருந்தபொழுது சமூக சேவையிலும், பொது வாழ்விலும் அதிக அக்கரை காட்டினார். 1920–ம் ஆண்டிலிருந்து கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். ராஜபாளையம் பஞ்சாயத்துப் போர்டிலும். இராமநாதபுரம் மாவட்ட கழகத்திலும் உறுப்பினராக இருந்து சேவைகள் பல செய்திருக்கிறார். மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். 1930-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும், 1931-லிருந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் உறுப்பினராக இருந்திருக்கிறார். இவர் 1920-லிருந்தே காங்கிரஸ் இயக்கத்துடன் தொடர்புகொண்டிருந்தார். 1934-ல் காங்கிரஸ் எம். எல். ஏ.-யாக மத்திய சட்டசபைக்கும் 1937–ல் சென்னை சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946–ல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பிரகாசம் மந்திரி சபையில் விவசாய மந்திரியாக இருந்து 1947-ல் இப் பதவியைத் துறந்தார். 1949-ல் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 வரை முதல் அமைச்சராக இருந்து சிறக்கப் பணியாற்றினார். 1954-ல் ஒரிஸ்ஸா கவர்னராக நியமிக்கப்பட்டு அவர் அப்பதவியை திறம்பட நிர்வகித்து அண்மையில் தான் அதிலிருந்து விலகினார்.

திரு. இராஜா, மதுரை மாவட்ட கழக சாரணர் சங்கத்திற்கு தலைவராகவும் பின்னர் இந்துஸ்தான் சாரணர் சங்கத்திற்கு மாநில உதவி சாரண கமிஷனராகவும் இருந்தார். அத்துடன் இந்துஸ்தான் சாரண சங்க நிர்வாக செயற் குழுவில் ஒரு உறுப்பினராகவும் இருந்தார். இவர் மறைவு நாட்டிற்கு மட்டுமல்ல, தமிழக சாரணருக்கு பெருத்த நஷ்டம். எனவே. அவரது மறைவு குறித்து. அவரது குடும்பத்தாருக்கு "சாரணர்" பெயரால் ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறோம்.

இவரது ஆன்மா சாந்தியடையுமாக !



இரு வைரங்கள்

(K. வெங்கடேசன், திருப்பயர்தக்கா)

அருணுசலம் என்பவர் தக்கா கிராமத்து மிட்டாதார். அவருக்கு சந்திரன், கண்ணன் என்ற இரண்டு பிள்ளைகள் உண்டு. சந்திரனுக்கு வயது ஒன்பது, கண்ணனுக்கு வயது ஏழு. அவர்கள் அச்சிற்றூரிலுள்ள கழகத் துவக்கப் பள்ளியில் முறையே நான்காம், இரண்டாம் வகுப்புகளில் படித்து வந்தனர்.

ஒரு சமயம் அச்சிற்றூருக்கு உத்தியோக நிமித்தம், தாசில்தார் ஸ்ரீமான் சிவஷண்முகம் விஜயம் செய்தார். தாசில்தார், தான் வரப்போவதை முன்னமேயே அறிவித்திருந்துங்கூட, எக்காரணங்கொண்டோ அவரை கிராமத்திற்கு வரும் கப்பிச் சாலையில் சந்திக்கத் தவறிவிட்டார் அந்தவூர் கர்ணம்.

கப்பிச் சாலையிலிருந்து கிராமத்திற்கு வரும் பாதை ஒரே சேறு நிறைந்திருந்தபடியால், தாசில்தார் ஏறிவந்த மாட்டு வண்டி சேற்றில் சிக்கிக்கொண்டது. "பளார், பளார்" என்று மாடுகள் மீது அடி விழுந்தது தான் மிச்சம். சக்கரங்கள் அசைய மாட்டாமல சேற்றில் சிக்கிக்கொண்டன. அந்த சமயம், தற்செயலாக அவ்வழியே செல்ல நேரிட்ட சந்திரனும், கண்ணனும் இதைக் கவனித்தார்கள். மாடுகள் மீது விழும் அடிகள், அவர்களுக்கு துக்கத்தை உண்டாக்கின. உடனே வண்டியின் அருகில் விரைந்து பார்த்தார்கள்.

வண்டியினுள் தாசில்தார் இருப்பதைக் கவனித்த இருவரும், பணிவுடன் அவருக்கு வணக்கம் தெரிவித்து, வண்டியை மேலே செலுத்தாமலும், சற்று தாமதிக்கும்படியும், தாங்கள் உடனே சென்று உதவிக்கு ஆட்களை அழைத்து வருவதாகவும் கூறி கிராமத்தை நோக்கி விரைந்தனர்.

சிறுவர்கள் வந்து கூறியவற்றைக் கேட்ட, மிட்டாதார் அருணுசலம், தன் ஆட்களை உடனே உதவிக்கு அனுப்பவே, தாசில்தார் கிராமத்தை வந்தடைந்தார். சிறுவர்களின் புத்திகூர்மையையும் அவர்கள் செய்த பணியையும் போற்றி தாசில்தார் கிராம மக்களுடன் சம்பாஷித்தார். "நீங்கள் இருவரும், இக்குக்கிராமத்திலிருந்தும் எவ்வாறு இந்நற்பண்புகளைப் பெற்றீர்கள்?" என்று அச்சிறுவர்களைக் கேட்டார், தாசில்தார்.

அதற்கு அச்சிறுவர்கள் கூறிய பதில் இதுதான்: நாங்கள் இவ்வூர்

பள்ளியிலுள்ள கட்டப்பொம்மன் பாலவீரர் படையில் சேர்ந்துள்ளோம். எங்கள் பால வீரர் ஆசிரியர் எங்களுக்கு விலைமதிக்க முடியாத "இரு வைரங்களை" அளித்துள்ளார். அவ்வைரங்களின் பிரகாசபதான் நாங்கள் செய்துவரும் இச்சிறு பணிகள்."

பாலர்களின் பதிலைக் கேட்டு ஆச்சரியமடைந்த தாசில்தார், "எங்கே, அந்த வைரங்களை எனக்குக் காண்பியுங்கள் பார்ப்போம்!" என்று கூறினர்.

இதைக் கேட்ட சந்திரன், "ஸார், நாங்கள் குறிப்பிடுவது நிஜ வைரக்கற்களையல்ல. வைரங்களுக்கு ஒப்பான இரு வாக்கியங்களையே நாங்கள் குறிப்பிடுகிறோம்.

"மூத்தோர் சொற்படியே பால
வீரர் நடப்பர்,
பால வீரர் வினயமும் சுத்தமு
மாயிருப்பர்"

என்பவைதான் அவை" என்றான்.

"இவ்விலைமதிக்க முடியாத வைரங்களைத்தான் எங்களுக்கு எங்கள் ஆசிரியர் அளித்திருக்கிறார், ஸார்" என்றான் கண்ணன்.

இது கேட்ட அதிகாரி மிக மகிழ்ச்சியடைந்து, சிறுவர்களை ஆசீர்வதித்தார்.

விற்பனைக்கு

(சிறியது)

ரூ. 1—8—0



(பெரியது)

ரூ. 3—0—0

ரவுண்டு

ரூ. 3—0—0

ஸ்பெஷல்

ரூ. 3—0—0

பெப்ருவரி 22-ல் நடைபெற்ற நூற்ருண்டு விழாவின்போது பாலவீரரும், வீரபாலிகைகளும் ஆடிக்காண்பித்த பற்பல விளையாட்டுக்களைக் கண்டு மகிழ்கின்றனர், அதில் பங்குகொண்ட ஹார்வி தம்பதிகள், மதுரை மாவட்ட கலெக்டரான ஸ்ரீ R. குஞ்சிதபாதம், ஸ்ரீ T. K. சிவசாம்பன், டோக் தம்பதிகள், முதலானோர்.



பெப்ருவரி 22-ல் மதுரை, ஸெயின்ட் ஜோசப்ஸ் கான்வெண்டில் மதுரை மாவட்ட பாரத் சாரண, வழிகாட்டிகள் சிறப்பாகக் கொண்டாடிய சங்க ஸ்தாபகர் ராபர்ட் பேடன் பவுல் பிரபுவின் பிறந்த தின நூற்ருண்டு விழா வைபவம்.

நாணய மாற்றுப் பட்டியல்

எந்த ஒரு லேவாதேவியிலும் நாணயங்களை ரொக்கமாகக் கொடுத்து மாற்றவேண்டியபோது அதற்குச் சமமான மற்ற நாணயங்கள்

அணா	பை	நயா பைசா	அணா	பை	நயா பைசா	அணா	பை	நயா பைசா	அணா	பை	நயா பைசா
0	3	2	4	3	27	8	3	52	12	3	77
0	6	3	4	6	28	8	6	53	12	6	78
0	9	5	4	9	30	8	9	55	12	9	80
1	0	6	5	0	31	9	0	56	13	0	81
1	3	8	5	3	33	9	3	58	13	3	83
1	6	9	5	6	34	9	6	59	13	6	84
1	9	11	5	9	36	9	9	61	13	9	86
2	0	12	6	0	37	10	0	62	14	0	87
2	3	14	6	3	39	10	3	64	14	3	89
2	6	16	6	6	41	10	6	66	14	6	91
2	9	17	6	9	42	10	9	67	14	9	92
3	0	19	7	0	44	11	0	69	15	0	94
3	3	20	7	3	45	11	3	70	15	3	95
3	6	22	7	6	47	11	6	72	15	6	97
3	9	23	7	9	48	11	9	73	15	9	98
4	0	25	8	0	50	12	0	75	16	0	100

1957 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வரும் புதிய நாணயங்களுக்கேற்ப தபால் கட்டணங்களும் கீழ்க்கண்டவாறு மாறுகிறது.

கடிதங்கள்

ஒரு தோலாவிற்கு மேற்படாத எடைக்கு—13 நயா பைசா. ஒவ்வொரு தோலாவிற்கு மேல் செல்லும் ஒவ்வொரு தோலாவிற்கும் அல்லது அதற்குக் குறைவான எடைக்கும்-6 நயா பைசா.

அஞ்சல் அட்டைகள்

ஒரு அஞ்சல் அட்டை —	5 நயா பைசா
பதில் அட்டையோடு கூடியது—	10 நயா பைசா

புத்தகங்கள், மாதிரி பாக்கெட்டுகள்

முதல் 5 தோலாக்கள் அல்லது அதற்குக் குறைவான எடைக்கு—6 நயா பைசா.

அதற்கு மேல் செல்லும் ஒவ்வொரு 2½ தோலா அல்லது அதற்குக் குறைவான எடைக்கு—3 நயா பைசா.

பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள்

10 தோலாக்களுக்கு மேற்படாத எடைக்கு—2 நயா பைசா.

10 தோலாக்களுக்கு மேற்பட்டதும் 20 தோலாக்களுக்கு மேற்பட்டதுமான எடைக்கு—3 நயா பைசா

20 தோலாக்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலாவுக்கும் அல்லது அதற்குக் குறைவான எடைக்கும்—3 நயா பைசா.

ஒரே பத்திரிக்கையின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் ஒரே பார்சலில் சென்றால் அதற்கான கட்டண விகிதம்:

10 தோலாக்களுக்கு மேற்படாத எடைக்கு—3 நயா பைசா. அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 5 தோலாவிற்கும் அல்லது அதற்குக் குறைவானதுமான எடைக்கு—2 நயா பைசா.

அத்தகைய பார்சல்கள் விலாசதாரின் வீடுகளில் கொண்டு கொடுக்கப்படுவதாக இருத்தல் கூடாது. அஞ்சல் நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளிடம் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.

அஞ்சல் கட்டுகள் (Parcels)

40 தோலாவிற்கு மேற்படாத எடைக்கு—50 நயா பைசா. 40 தோலாவிற்கு மேற்பட்ட ஒவ்வொரு 40 தோலாவுக்கும் அல்லது அதற்கு குறைவான எடைக்கும்—50 நயா பைசா.

எழுதுவோர் கவனிக்க !

சாரணர் இதழுக்குச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், எழுதுவோர் தாளின் ஒரே பக்கத்தில் மையினால், தெளிவாக வரிக்கு வரி சிறிது இடம் விட்டு, எழுதவேண்டும். அவ்விதமின்றி வருபவை இடம் பெறா என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். செய்திகள் அனுப்புவோர் கூடுமானவரை தமிழிலே எழுதி அனுப்பவேண்டுகிறோம். சாரண நடவடிக்கை (Scout activities) களின் நல்ல புகைப்படங்கள் இருந்தால் அனுப்புங்கள். ஏற்றதாயின் பிரசுரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



யுவபுரியில், திரு. ஜே. டி. ஆசீர்வாதம் அவர்களின் நிர்வாகத்தில், சென்னை தெற்கு பிராந்திய ரெயில்வே பாரத் சாரண, வழிகாட்டிகள்ன் தலைமையக கமிஷனரான திரு. R. M. சாமி, நடாத்திய ரோவர்கள்ன் பயோனியரிங் திட்டங்களை பார்வையாளர்கள் பார்வையிடுகிறார்கள்.

மார்ச் 10-ல் யுவபுரியில் பார்வையாளர் இனத்தன்று நடைபெற்ற பயோனியரிங் பயிற்சிபெற்ற ரோவர்களைப் பார்வையிடுகிறார் டாக்டர் K. G. ராமபத்ரன்.



பெப்ருவரி 22-ல் சென்னை—பெரம்பூரிலுள்ள தெற்கு பிராந்திய ரெயில்வே பாரத் சாரண, வழிகாட்டிகள் சிறப்பாக கொண்டாடிய சாரணத் தந்தை பேடன் பவுல் பிரபுவின் பிறந்த தின நூற்றாண்டு விழா வைபவம்.

செய்திகள்

தஞ்சை

கீழத் தஞ்சை ஜில்லா சாரணச் சங்கத்தின் ஆதரவில் 22—2—57 அன்று வெளிப்பாளையம் தேசிய நடுத்தரப் பள்ளி மைதானத்தில் மாலை 5 மணிக்கு நாகை டாக்டர் S. ஆர்தர் அம்மையார் M. B. B. S. தலைமையில், பேடன் பவல் அவர்களின் நூற்றாண்டு பிறந்த தின விழாவும், சாரண இயக்க பொன் விழாவும் சேர்ந்து அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

நாகை தேசிய உயர்தரப் பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் சாரணீயக் கொடியை ஏற்றுவித்தார்கள். பிறகு ஜில்லா கமிஷனர் திரு. நேசய்யா அவர்கள் எல்லோரையும் வரவேற்று, தினத்தின் விசேஷத்தை விளக்கிக் கூறினார்.

பின்பு பல பள்ளியிலுள்ள பால வீரர், சாரணர், திரிசாரணர், வீர பாலிகைகள், பல விளையாட்டுக்கள், ஊக்க ஒலிகள், பாட்டுக்கள், கும்மி, நடனம் முதலியவை 1 மணி நேரம் நடத்திக் காண்பித்தனர்.

இந்த ராலி உதவி கமிஷனர் திரு. S. பாலசுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நடந்தது. பின்பு, ஜில்லா காரியதரிசி டாக்டர் வரதாசாரி அவர்கள் நன்றி கூற, நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

பட்டவத்தை

1957-ம் ௵ பெப்ரவரி மாதம் 16-ம் தேதி பட்டவத்தை சாரணக் குழுவைச் சேர்ந்த 22 சாரணர்கள் திரு. ஜி. எம். பால் சாரணாளர், திரு. ஏ. எம். தேவதாசன் உதவி சாரணாளர் ஆகிய இருவரின் தலைமையின் கீழ் நுவர எலியா சமீபமாகவுள்ள அக்கலை தாவரத் தோட்டங்களுக்கும், ஹட்டன் கீவ் எஸ்டேட், மஸ்கேலியா முதலிய இடங்களுக்கும் உல்லாசப் பிரயாணமாகச் சென்றனர்.

ஹட்டன் டிஸ்டிரிக் கமிஷனர் திரு. எஸ். சி. ஜெயசிங் சாரணர்களை ஹட்டனில் சந்தித்துப் படையைப் பார்வையிட்டார். பின் ஒரு ஐக்கியக் கூட்டம் நடைபெறவே, அதில் டிஸ்ரிக்ட் கமிஷனர் தமிழில் சொற்பொழிவாற்றினார். தங்கள் தாய் மொழியாகிய தமிழில் முதல் முதல் ஓர் கமிஷனர் பேசக் கேட்டு சாரணர் மிகவும் மகிழ்ந்தனர். கீவ் தோட்டத்து சாரணர் முதலில் எங்களுக்குச் சங்கீத விருந்தளித்ததுடன் பின் அறு

சுவை உண்டியை எங்களுக்கு இராப் போஜனமாகக் குழு சாரணுளர் இல்லத்தில் அளித்தனர். எங்கள் சாரணுளர் குழு சாரணுளருக்கும் அவருடைய சாரணர்களுக்கும், திரு. போஸ்வெல் துரை அவர்களுக்கும், கீவ் தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கும், எங்களுக்கு அளிக்கப்பட்ட இவ்வித உன்னத மரியாதைகளுக்காக மனமுவந்து நன்றி கூறி பாராட்டிப் பேசியதுடன் விரைவில் பட்டவத்தைக்கு வருமாறும் அவர்களை அன்புடன் அழைத்தார். அதே இரவில் நாங்கள் கீவ் விட்டு மஸ்கேலியாவுக்குப் போகு முன், திரு போஸ்வெல் அவர்கள் எங்களுக்கு நல் வாழ்த்தும், நல்லாசியும் கூறினுர். ஹட்டன் டிஸ்ரிக்ட் கமிஷனர் அவர்களுக்கும் கீவ் தோட்டத்து குழு சாரணுளர் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

அன்று இரவில், நாங்கள் ஆதமலே எனப்படும் 7360 அடி உயரமுள்ள, சிவனடி பாத மலேயில் ஏறினேம்.

மறு நாள் ஹட்டன் டிஸ்ரிக்ட் கமிஷனரும் ஹைலாண்ட்ஸ் கல்லூரி தலைமை ஆசிரியருமான திரு. ஜெயசிங் எங்களுக்கு பகற் போஜனம் அளித்தார்கள்.

எங்கள் சாரணர்களில் சிலர் பதுளைக்கு அப்புறம் ஒரு போதும் சென்றது கிடையாதாகையால், இந்த உல்லாசப் பிரயாணம் அவர்களுக்கு வெகு குதூகலயாகவும் பிரியமாகவும் இருந்தது. இவ்வருஷத்தின் கடந்த உல்லாசப் பிரயாணம் போல இதையும் வெற்றிகரமான முறையில் ஒழுங்கு செய்து, கொண்டு நடாத்திய அருஞ் செயலுக்காக எங்கள் சாரணுளர் அவர்களுக்கு நாங்கள் யாவரும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேம்.

திருமங்கலம்

திருமங்கலம் பிப்ரவரி 22:— இன்று திருமங்கலம் பாரத் சாரணர் சங்கத்தின் ஆதரவில் பி. கெ. என். உயர்நிலேப் பள்ளியில் உலக பேடன் பவல் பிரபுவின் நூற்றுண்டு விழா நடைபெற்றது.

மாலே 4-30 மணிக்குச் சாரண, திரிசாரண அணிகள் சாரண ஆசிரியர்களின் தலைமையில், நகரின் முக்கியத் தெருக்களின் வழியாகப் பொன் மொழிகளேக் கொண்ட அட்டைகளுடன் ஊர்வலம் வந்தன. மாலே 5 மணிக்குப் போர்டு பெண்கள் உயர்நிலேப் பள்ளித் தலைமையாசிரியை ஸ்ரீமதி அமராவதி B.A., L.T. அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கிற்று. இறை வணக்கத்திற்குப் பின், இச்சங்கத்தின் செயலாளர் திரு. M. V. M. இராசமாணிக்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர். சாரணர் அணி வகுப்பும் சாரணப் பதிவு நிகழ்ச்சியும் நடைபெற்றன. பின் இப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், பண்டித லெட்சுமி நரசிம்மன் அவர்கள், சாரணீயத்தைப் பற்றி விளக்கிப் பேசினுர். தொடர்ந்து, திரு. ஜெயினுலாவுதின் அவர்கள், அன்பும், உயர் பண்பாம் தொண்டும் வளரச் செய்யும், சாரணீயத்தின் சிறப்பு, அங்நோக்கங்களேச் செயல் படுத்தல் ஆகியவற்றைப் பற்றியும், இப்பள்ளி

உதவி ஆசிரியர் திரு. K. இராமுடு ஐயாவர்கள், அணிவகுப்பின் சிறப்பு அதனுல் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றைப் பற்றியும் பேசினர். பின்னர் இப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. M. அருணுசலம் M. A., L. T. அவர்கள் சாரணீயத்தின் நோக்கங்களில்-எளிய வாழ்க்கை, கட்டுப்பாடு: தனக்கென வாழாமை, பரந்த நோக்கம், தளராது உழைத்தல், நேர்மை குன்றுமை முதலிய உயர் பண்புகளை அனைவரும் செயல் படுத்த உறுதி கொள்ள வேண்டுமென்றும், தொகுத்துக் கூறினர். தலைவர் முடிவுரைக்கு பிறகு தலைமையாசிரியர் நன்றி கூறிய பின், நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது. பின் வந்திருந்தோரனைவர்க்கும் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

உசிலம்பட்டி

உசிலம்பட்டி லோக்கல் ஸ்கவுட் அஸோஸியேஷன் ஆகரவின் கீழ், **உலகப் பிரதமச் சாரணர் கில்வெல் பேடன் பவல் பிரபு அவர்களின் நூருவது பிறந்த தின விழாவையொட்டி,** உசிலம்பட்டி கவர்ன்மெண்ட் போர்டிங் ஹோம் காம்பவுண்டில், 22—2—57 உ வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு **"ஒரு ஸ்கவுட் அன்ட் கைட் ராலி"** நடத்தப்பட்டது.

உசிலம்பட்டி போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஜனுப் ஜி. யாகூப் கான், பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமை வகித்துக் கொடியேற்றினர்.

ராலியில், கருக்கட்டாம்பட்டி, மெய்யனம்பட்டி அரசாங்கக் கள்ளர் ஸ்கூல்ஸின் பாலவீரர் படைகளும், உசிலம்பட்டி போர்டிங் ஹோம், உசிலம்பட்டி போர்டு ஹைஸ்கூல் சாரணர்ப் படைகளும் உசிலம்பட்டி ஆர். ஸி. ஸ்கூல், உசிலம்பட்டி டி. இ. எல். ஸி. ஆதாரப்பள்ளி வீரபாலிகைப் படைகளும், உசிலம்பட்டி டி. இ. எல். ஸி. (பெண்கள்) ஹைஸ்கூல் கைட்ஸ் கம்பெனியும் கலந்து கொண்டன.

மாவட்டத் துணை ஸ்கவுட் கமிஷனர் உயர் திரு. டி. ஐஸக் ரத்னசாமித் தேவர், ராலியையும், அணிவகுப்பையும் பார்வையிட்ட பின், சாரணர் சாரணிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர் ஹைஸ்கூல், போர்டிங் ஹோம் சாரணர்களால், கவாத்தும், பிரமிட் வேலையும் செய்து காண்பிக்கப்பட்டன.

உதவி ஸ்கவுட் கமிஷனர் "கில்வெல் பேடன் பவல்" அவர்களது வாழ்க்கை வரலாறை கூறி, வாலிபர்களனைவரையும் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து, பயிற்சி பெற்று, முன்னேற்றமடையுமாறு கேட்டுக்கொண்டார். உசிலம்பட்டி ஸீனியர் ஸ்கவுட் ஆர்கனைஸர் திரு. டி. என். பூமிநாதனும், சாரணுளர் திரு. சுப்பராமுலு நாயுடு அவர்களும் பேசினர்கள்.

அக்கிராசனர் அவரது முடிவுரையில் "சாரணர் இயக்கத்தின் பெருமை"யைப் பற்றி மஹாத்மாஜி, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு போன்ற பற்பல பெரியோர்களின் பேருரைகளை விஸ்தரித்து விளக்கிய

பின்னர், சாரணர் இயக்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும், அவரவர் களுக்கேற்பட்ட உறுதி மொழி, சட்டத்தினபடி, செயல் முறையில் அனுஷ்டித்து நடக்க அதி தீவிரமாய் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உதவி ஸ்கவுட் கமிஷனர் வந்தனோபசாரம் கூற, ஜன கண மன கீதத்துடன், ஷீ ராலி இனிது முடிவு பெற்றது.

ராலி வெற்றிக்கு, உசிலை பாரத் சாரணர்ச் சங்கக் கௌரவக் காரிய தரிசி திரு. பி. பேயத் தேவர் அவர்களும், கவர்னமெண்ட் போர்டிங் ஹோம் அஸிஸ்டண்ட் வார்டன் திரு. எஸ். நாட்டன் துரை அவர்களும், ஹைஸ்கூல் ஸ்கவுட் மாஸ்டர் திரு. சுப்பாராமுலு நாயுடு அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி, மிகவும் போற்றற்குரியது.

அண்ணாமலை நகர்

குடியரசு தினத்தன்று, அண்ணாமலை நகர் திரிசாரணர்கள் சிறப்புக் கூட்டம், லெப்டினெனட் வி. திரு வேங்கடாச்சாரி, உதவி ஜில்லா சாரணக் கமிஷனர் தலைமையில் நடந்தது. தேசியக் கொடியை ப. வி. திருவேங்கடாச்சாரி அவர்கள் ஏற்றி வைத்தார். திரு. என். ராஜகோபலன் (R. S. L.) வரவேற்பு நிகழ்த்திய பிறகு ஸ்ரீ வி. திருவேங்கடாச்சாரி அவர்கள், தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசினார். இறுதியில் ஸ்ரீ ரங்கசாமி (Senior Rover Mate) நன்றி கூறினார்.

பிப்ரவரி 22-ம் தேதி சாரணீய இயக்கத் தந்தை லார்டு பேடன் பவுல் பிரபுவின் நூறுவது பிறந்த தினக் கொண்டாட்டமும், சாரண தங்க ஜூபிலி கொண்டாட்டமும் சிறப்பாக அண்ணாமலை நகர் R. ct. High Schoolவில் நடத்தினார்கள். தலைமை ஆசிரியர் திருவாளர் பி. ஆர். சுவாமி நாத முதலியார் வரவேற்பு உரை நிகழ்த்திய பிறகு Lt. வி. திருவேங்கடாச்சாரி உதவி ஜில்லா சாரணக் கமிஷனர், விவரமாக லார்டு பேடன் பவுல், லேடி பேடன் பவுல் அவர்களின் வாழ்க்கைகளைப் பற்றியும், ஏற்படுத்திய இயக்கங்கள் பற்றியும், அவர்களின் உழைப்பின் திறனைப் பற்றியும், சாரண இயக்கத்தின் நோக்கம் பற்றியும் சொற்பொழிவாற்றினார். பின்பு தலைமை ஆசிரியர் திருவாளர் சுவாமிநாத முதலியார் நன்றி கூறினார்.

வத்தலக்குண்டு

1957-ம் ஆண்டு பிப்ரவரி மீ 22-ம் உ எங்கள் சங்கச் சார்பில் லார்டு பேடன் பவல் அவர்களது ஜனன நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை 7 மணிக்கு ஊர்வலமும் 8-30 மணிக்கு பட்டிவீரன் பட்டி ஸ்ரீமதி பாண்டியன் அவர்களால் கொடியேற்றமும் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு ஸ்ரீ A. C. மில்ஸ் M. S. C. அவர்கள் தலைமையில் விழாவும் ஆரம்பிக்கப்பட்டது. சாரணச் சிறுவர் சிறுமியாது களி விளையாட்டுகள் நடைபெற்றன. பட்டிவீரன் பட்டி உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ D. J. சிரோன்மணி ராஜ் அவர்கள் லார்டு பேடன் பவல் அவர்களது பிறப்பு, சங்கக் கொள்கைகள் அதன் சிறப்பு ஆகியவற்றைப் பற்றி ஒரு

சொற்பொழிவாற்றினர்கள். Mrs. வைட் அம்மையார் தீக்களிபாட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். கடைசியில் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடன் விழா முடிவடைந்தது.

திண்டுக்கல்

27—2—57-ம் தேதியன்று திண்டுக்கல் நகராட்சி உயர்தரப் பள்ளி மைதானத்தில், ஜில்லா உதவி சாரண கமிஷனர் ஸ்ரீ V. குமாரசுவாமி B. A. L. T. தலைமையில் சாரணர் அணிவகுப்பும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. சாரணப் பயிற்சிகளுக்குப் பின், மதுரை நகர சாரண நிர்மாண கமிஷனர் ஸ்ரீ K. S. சம்பத் பேடன் பவுல் பிரபுவின் ஜீவிய சரிதையைப் பற்றிப் பேசினர். திண்டுக்கல் தாலுகாவிற்கு ஒரு சாரணர் சங்கம் நிருவப்பட்டு, அதற்கு அடியிற் கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் :—

ஜனப் K. M. முகமது அப்துல் காதர்

உபதலைவர்கள் :—

1. ஸ்ரீ K. கணேசன், B.A., B.L.
2. ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன்

காரியதரிசி :—

ஸ்ரீ V. குமாரசுவாமி, B. A., L. T.

பொக்கிஷதார் :—

ஸ்ரீ N. V. G. B. ராமமூர்த்தி

மேலும் பத்து கமிட்டி அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கை

இலங்கை, பட்டவத்தை சாரணக் குழுவினர், 1957 பெப்ரவரி, 22-ம் திகதி பேடன் பவுல் பிரபுவின் நூறுவது பிறந்த தினத்தை சிறந்த முறையில் ஜில்லா உதவி கமிஷனர் திரு. A. E. Q. Helling (Adc, Passara Lunugala) அவர்களின் தலைமையின் கீழ் கொண்டாடினர்.

இலங்கையின் தேசியக் கொடி, யூனியன் ஜெக், ஸ்வீடன் தேசத்து கொடி, சாரணக் கொடி முதலியவைகள் பறக்க விடப்பட்டன. ஜில்லா உதவி கமிஷனர் அணிவகுப்பைப் பார்வையிட்டார். இந்த விழாவில் முக்கியமாக சாரணுளர் திரு. T. M. Paul திரி சாரணத் தலைவர்கள் திருவாளர்கள் A. P. Swami Dason, Y. P. Gressy, A. B. P. Gressy யும் Cub Master முத்துசாமி அவர்களும் கலந்துக் கொண்டார்கள்.

ஜில்லா உதவி கமிஷனர் திரு. Helling சாரணத் தந்தையின் வாழ்க்கை வரலாற்றை ரசிக்கத்தக்க முறையில் எடுத்துக் கூறினர். திரு. A. P. Swami Dason சாரணத் தந்தையின் "கடைசி வேண்டுகோளை" எடுத்துக் கூறினர். முதன்மையான படை 'பட்டவத்தை தமிழ் சாரணர் குழுவே' என ஜில்லா கமிஷனர் உரைத்தார். நன்றி கூறிய பின், தேசியக் கீதம் பாடப்பட்டு விழா மிகவும் இனிதாக முடிவடைந்தது.

கூடலூர்

கடந்த பெப்ருவரித் திங்கள் 15-ம் நாள் கூடலூர் எஸ்டேட் பள்ளியில்,

பள்ளியின் மானேஜரான திரு. ஹட்க்கின்ஸ், தலைமையில் ஒரு அணிவகுப்பு நடைபெற்றது. பால வீர ஆசிரியர் திரு. தேவராஜ் அவர்கள் இருபது பால வீரர்களேயும் பால வீரத் தலைவர்களேயும் பதினைந்து வீர பாலிகைகளேயும் அழைத்து வந்திருந்தார்.

மாவட்ட சாரண உதவிக் கமிஷனரான ரெவ. V. D. எலியட், பால வீரர், வீர பாலிகைகளுக்கு சின்னங்கள் வழங்கினர். திரு. ஹட்க்கின்ஸ் இன்னும் அநேக எஸ்டேட் தொழிலாளர்களும் அங்கு வந்து குழுமியிருந்தனர். மாவட்ட கௌரவச் செயலாளரான திரு. V. P. இராமசாமி எஸ்டேட் பள்ளிகளில் நடைபெறும் சாரண இயக்கமானது எத்தகு முறையிலே செயல்பட்டு வருகிறது, அதனுல் உண்டாகும் பயன்கள் யாவை என்பது பற்றி விரிவுபட எடுத்துக் கூறினர்கள். நீலகிரி மாவட்ட சாரண அணிக் குழுவினரும் அவ்வணி வகுப்பில் கலந்துகொண்டனர்.

மாவட்ட சாரண ஆசிரியரான திரு. ஜே. ஜேசன் நன்றி நவின்ருர்.

(1) கடந்த பெப்ருவரித் திங்கள் 22-ம் நாள் காலே 9 மணிக்கு எஸ்டேட் அணிவகுப்பு மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

(2) சாரணத் தந்தையான பேடன் பவல் பிரபுவின் பிறந்த தின விழா, நினைவு விழா இவை இரண்டையும் சேர்த்து கொண்டாடுவதற்கென எஸ்டேட் தொடக்கப் பள்ளி பால வீரரும் வீர பாலிகைகளும் பள்ளி மைதானத்தில் வந்து குழுமினர்கள். விழாவையொட்டி பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த விழாவிற்கு எஸ்டேட் மானேஜரான திரு. W. ஹட்க்ஹின்ஸ் தலைமைதாங்கினர்.

தலைவர் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். அடுத்து பால வீரரும், வீர பாலிகைகளும் தங்களது பயிற்சி பெற்ற களியாட்டங்களினுல் அங்கு கூடியிருந்த அனைவரையும் மகிழ்வித்தனர்.

சாரண வழிகாட்டிகளுக்கென சாரணத்தந்தையின் இறுதி வார்த்தைகள் திரு. J. ஜோசப் அவர்களால் வாசிக்கப்பட்டன.

பின்னர், தலைவர் தன் உரையில் சாரண பிரதம கமிஷனரின் மகத்தான சேவையைப்பற்றியும் அவர் சாரண இயக்கத்தை ஒரு உலக இயக்கமாக ஆக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிபற்றியும் பொருள் சிறக்கப் பேசினர்.

அடுத்து, மாவட்ட சாரண ஆசிரியரான திரு. ஜேசன், சாரணன் எத்தகு முறையிலே தன் வீடு, கிராமம், மாநிலம், நாடு இவைகளுக்கு உதவி செய்ய, சேவை செய்ய முடியும் என்பதுபற்றி தெளிவாக விவரித்தார். சாரண பிரதம கமிஷனரின் பிறந்த தின நூற்றுண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த வேளையிலே அவருக்கு தகுந்ததொரு மரியாதை செலுத்தும் வகையில் இளைஞர் குழாம் சாரண இயக்கத்திலே சேர்ந்து நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு நல்லதொரு பணியாற்ற

அனைவரையும் அவர் அறைகூவி அழைத்தார்.

திரு. W. ஹட்க்கின்ஸ் தனது நன்றியுரையிலே பால வீர ஆசிரியர்களின் திறமையை எடுத்துக்கூறியதுடன், அடுத்த ஆண்டில் சாரணீயம் இன்னும் பலமடங்கு வளர்ச்சி காணும் என்ற நம்பிக்கை தெரிவித்தார்.

பின்னர், அங்கிருந்த குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. நாட்டு வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

பெற்றோர் தின விழாவும் சாரண விழாவும்

பெற்றோர்கள் தினமானது கடந்த் பெப்ருவரி திங்கள் 25-ம் நாள் மாவட்டக் கழக லோக்கல்பண்டு பள்ளியின் பாள கோளா மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவிற்கு மாவட்ட கழக தலைவரான திரு. C. P. ராஜன் தலைமை வகித்தார். பொது மக்கள் பலர் விழாவிலே பங்கெடுத்துக்கொண்டனர். இவ்விழா உதகமண்டலத்திற்கு சுமார் 6 மைல் தூரத்தில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் பல திறமையான களியாட்டங்களைக் காட்டி எல்லாருக்கும் மகிழ்ச்சியூட்டினார்கள். உதகமண்டல சரக பள்ளிகளின் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டரான திரு. A. நாகலிங்கம், கல்விபற்றி ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினார். நீலகிரி மாவட்ட பாரத் சாரண வழிகாட்டிகள் சங்க உதவி முகாம் அதிகாரியான திரு. V. P. இராமசாமி, "இளைஞர் சாரணீயம்" என்பதுபற்றிப் பேசினார். தலைமை ஆசிரியர் நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் கூட்டம் முடிவடைந்தது.

சாரண சாரணீய குழுத் தலைவர்களுக்கு!

நமது A. P. R. O. 210-வது விதியின் பிரகாரம் உங்கள் படைகளின் பதிவு மார்ச்சு 31 உ வரைக்கும் தான் அமுலிலிருக்கும். அதன் பிறகு ஷெ பதிவு புதுப்பிக்கப்படாவிடில் உங்கள் படை பதிவுக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். படைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போக வேண்டும் என்றும், ஒரு தடவை பதிவு செய்யப்பட்ட படை புதுப்பிக்கப்பட தவறக்கூடாது என்றும் நாம் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. ஆகையால் உங்கள் படைகளின் பதிவை தவறாது உடனே புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(கையொப்பம்) **V. பத்மனாபன்**
கௌரவ காரியதரிசி
பாரத் சாரண சங்கம்,
மதுரை மாவட்டம்.

225289

Statement about ownership and other particular about newspaper

"SARANAR"

to be published in the first issue every year after the last day of February.

FORM IV

(See Rule 8)

1. Place of publication	...	41, North Avani St., Madurai.
2. Periodicity of its publication	...	Monthly
3. Printer's Name	...	Rev. Fr. M. A. Thamburaj
Nationality	...	Indian
Address	...	De Nobili Press P. O.
4. Publisher's Name	...	Bharat Scouts & Guides, Madurai Dist. Assn.
Nationality	...	Indian
Address	...	41, North Avani Street, Madurai
5. Editor's Name	...	Mr. J. D. Asirvatham,
Nationality	...	Indian
Address	...	C/o Y. M. C. A. Uuvapuri New Jail Road, Madurai
6. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	...	Owner of the Newspaper: The Bharat Scouts & Guides, Madurai District Association, 41, North Avani Street, Madurai.

I, J. D. Asirvatham, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date
16th Feb., 1957

J. D. ASIRVATHAM,
Signature of Editor.

For "BHARATH SCOUTS & GUIDES"
MADURAI DT. ASSOCIATION.